தியாகராஜா தேவசிகாமணி
தேவசிகாமணி அசோக்குமார்
தேவசிகாமணி சுகுணா

நினைவாலய
அர்ச்சனை மலர்

An offering to the memory of Thiyagarajah Thevasigamany and his children Ashokkumar and Suguna.

தியாகராஜா தேவசிகாமணி

28-04-1933 02-05-1983

தேவசிகாமணி அசோக்குமார்

7-11-1965 02-05-1983

சுகுணா தேவசிகாமணி

25-01-1970 02-05-1983

1 – 5 – 1983 ஞாயிறு இரவு. ருதிரோற்காரி சித்திரைப் பௌர்ணமியின் பின்னர் பஞ்சமி ஆட்சி செய்யும் வேளை,

கார் விபத்து ஒன்று மாதம்பையில் நிகழ்ந்தது.

தேவசிகாமணியும்,

அசோக்கும்,

சுகுணாவும்..

முருகா!

இந்த இழப்புக்களைத் தாங்கிக் கொள்ள நாம் துவண்டு துவண்டு துவண்டு பழகிக் கொள்கிறோம். ஆனால்..........

தருமதேவதை........ அவள் இதைத்தாங்கிக் கொள்ளவே மாட்டாள்.

ஞானபண்டிதா!

உன் புன்சிரிப்பின் சாட்சியங்களை நீயாகவே ஏனப்பா அழிக்கிறாய்?

இறைவா!

மரணமாகிய தூதனை இன்று என் வீட்டு வாசலுக்கு
அனுப்பியுள்ளாய் அண்டத்தப்பாலிருந்து உன்
அழைப்பை ஏற்று வந்துள்ளான் அவன்.

இன்று இவ்விரவு மிக இருண்டுள்ளது. என் இதயம்
பயத்தால் பீடிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும்
கை விளக்கேற்றி வணங்கிப் பணிவேன் அவனை.

இரு கைகூப்பி கலங்கிய கண்கள் நீர் துளித்தாலும் வணங்கிப்
பணிவேன் அவனை. என் பிராணதனத்தை அவன்
சரணங்களில் சமர்ப்பித்து ......

உன் கட்டளையை நிறைவேற்றி விட்டு அவன் போய்
விடுவான் - என் உதய காலத்தை இருட்டடித்துவிட்டு.
சூனியப்பட்ட என் வீட்டிலிருந்து கொண்டு என்னையே
இனி உன் சரணத்தில் அர்ப்பணம் செய்வேன்.

....

எந்த உன் கொடிகளை என்னிடம் தருகிறுயோ
அவற்றை ஏந்தும் சக்தியை எனக்குக்கொடு.
உன் சேவையின் முயற்சிகளைத் தாங்கும் பக்தியையும்
எனக்குக்கொடு.

இந்த அடர்ந்த வாழ்க்கை ஒரு செல்ல முடியாத வழி.
அதில் எவ்வவளவு தியாகம், சோகம், பிரிவு, தகிப்பு!
வாழ்வில் மரணம், பாய்ந்து செல்ல, மரணத்தில்
எப்படி உயிர் பெற்றேன்?

அந்தி வேளையில் அடைகிறேன் உன் வீட்டில்
சகலருக்கும் அபயமளிக்கும் உன் சரணங்களில்.

— தாகூர் —

தியாகராஜா தேவசிகாமணி

1968—1983 க் கால எல்லைக்குள் கொழும்பு புறக்கோட்டை வணிக உலகின் முக்கியஸ்தர்களுள் ஒருவராக மிளிர்ந்துக்கிளம்பி ஹொங்கோங் முதல் அமெரிக்காவரை வர்த்தக உறவுகளை நிறுவிவளர்த்த தேவசிகாமணி அவர்கள், வல்வெட்டித்துறையைச்சேர்ந்த இரத்தினசாமி தியாகராஜாவினதும், காந்திமதியம்மாவினதும் மூத்த புதல்வராவர். 28.4.1933 அன்று பிறந்த அவர் வல்வைச் சிதம்பராக் கல்லூரியிற் கல்விகற்று, சிரேஷ்ட வகுப்புச் சித்தியின் பின்னர் அரசாங்க உத்தியோகத்திற் சேர்ந்தார். கண்காணிப்பு மேலாளராகத்தம் உத்தியோக வாழ்க்கையை 1949 இல் தொடங்கியவர், 1857 இல் எழுதுவினைஞர் சேவையிற் புகுந்து வனபரிபாலனத்திணைக்களத்தின் கணக்குப்பரிசோதனைத் துறையிற் கடமையாற்றினர். 1968 வரை. பதினேழு வருடகாலம் அங்கு பணியாற்றினர் பதவி உயர்வுகள் பெற்றார்.

அரசாங்க உத்தியோகத்தராக இருந்த நாட்களிலேயே சரோஜினிதேவியைத் திருமணம். செய்தார். "கட்டி" வல்வெட்டித்துறை எஸ். வி. நடராஜாவின் இரண்டாவது மகள் வாழ்க்கையின் சௌந்தர்யங்களையும் சௌகரியங்களையும் நுனித்து இன்புறும் மனப்பாங்குடைய தேவசிகாமணி–சரோஜினி திருமணம் காதலிருவர் கருத்தொருமித்து நடந்த திருமணம்.

"தேவா" வின் வாழ்க்கை புதிய சிகரங்களை நோக்கி முன்னேறியது.

1968 இல், ஜனாப் முகம்மது இப்ராகீம் அவர்களுடன் கூட்டுச்சேர்ந்து வணிகத்திலிறங்கினர். தேவசிகாமணி அதிர்ஷ்டசாலி என்பது தெரிந்தது. வாழ்க்கைத்துணையாலும். சிறப்பு. வணிகத்துணையாலும் முன்னேற்றம். பாகஸ்தர்கள் தோழர்களாகத் தொழிற்பட்டனர். முன்னேறினர்.

1968 இல் தொடங்கிய வணிகமுயற்சிகள், எண்பதுகளின் ஆரம்பத்தில் ஒரு இராச்சியமாகவே மிளிர்ந்தது எஸ். எஸ். கே. ஹாஜா அலாவுதீன் கம்பனியின் பாகஸ்தராகவும் ராற்ரு இண்டஸ்றீஸின் முகாமைப் பாகஸ்தராகவும், ஜெற்ரோ ரெக்ஸ்ரைல்ஸ் லிமிட்டெட்டின் முதல்வராகவும் தேவசிகாமணி உயர்ந்தார் கட்டுநாயக்க வர்த்தகவலயத்தில் வெளிநாட்டு அனுசரணையுடன்விக்ரறி காமென்ற்ஸ் எனும் நிறுவனத்தையும் சில நாள் நடத்தி வந்தார்.

வணிக முதன்மையும் மேலாண்மையும் காரணமாக, 1982 இல் மேற்கு ஐரோப்பியப் பயணம் ஒன்றினை மேற்கொண்டு தங்கள் வர்த்தக வளர்ச்சியை விஸ்தரித்துக்கொண்டார் தேவசிகாமணியின் வர்த்தக உறவுகள் ஹொங்கோங் யப்பான், சிங்கப்பூர், இந்தியா, மத்தியகிழக்கு நாடுகள், ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்காவை உள்ளடக்கிநின்றன.

பணத்தைப் பிறர் மெச்சச் சம்பாதித்த திரு தேவசிகாமணி, பணத்திற்கு அடிமையாகவில்லை. அதனைத்தனது ஒரே சிந்தனையாகக் கொள்ள வில்லை, "உழைப்பது வழங்குதற்கே" என்பது அவர்சித்தாந்தம். ஒரு கால் நூற்றாண்டுக்கு முன்

வர் அவர்மாமன் எஸ், வி. நடராசா நடத்திக் காட்டிய கொடைமரபு மீண்டும் பிரவகிக்கத் தொடங்கிற்று. தேவசிகாமணி பாத்திரமறிந்து அள்ளிக்கொடுத்தார்.

• நெடிய காட்டு விநாயகர் ஆலய மோர்மடம் முதல் பல்வேறு கோயித் திருப்பணிகளுக்கு அள்ளிவழங்கினார். வல்வெட்டித்துறையின் பொதுவாழ்வில் முக்கியம் பெறும் விளையாட்டு நிறுவனங்களுக்கும் கலாசாரத் தாபனங்களுக்கு நிறைய வழங்கினார்.

கொழும்பில், கொழும்புஇந்துக்கல்லூரி, சென்ற். பிரிஜெட்ஸ் கல்லூரி ஆகிய பல நிறுவனங்களுக்கும், பல்வேறு கோயில்களுக்கும் வழங்கினார்.

தேவசிகாமணியின் குடும்பவாழ்க்கை மகோன்னதமானது. கொள்ளுப் பிட்டி, ரொற்றுண்டா கார்டன் முதலாம் இலக்க இல்லமான ''சுறேக்கா'' தேவசிகாமணியின் கலையுணர்ச்சிக்கும் விருந்தோம்பலுணர்வுக்கும் நல்ல எடுத்துக் காட்டு.

பாசமுள்ள கணவனாகவும் வாஞ்சையுள்ள தந்தையாகவும் தேவசிகாமணி தொழிற்படுவதைப் பார்ப்பது மனதுக்கு நிறைவு தரும் காட்சியமாக அமைவது.

தேவசிகாமணி உறவுப்பிணைப்புகளைப் பெரிதும் போற்றியவர். குறிப்பாக குடும்பத்தின் குழந்தைகளைக் கவனிப்பதில், அவர்களைச் சீராட்டுவதில் அவருக்கு நிகர் அவரே, மூத்தோரைக் கௌரவித்து, சமமானரை நண்பர்களாக்கி, இளையோரை ஊக்கி முழு குடும்பத்தின் வாத்சல்யத்தையும் அவர் பெற்றிருந்தார். தேவசிகாமணியிடம் பணமும் இருந்தது. பணத்தினாற் பெறமுடியாத பவ்வியமும் இருந்தது.

ஒரு குடும்பம் தனது தலைவனை இழந்துள்ளது. சுற்றம் அற்புதமான உறவினனை இழந்துள்ளது. கிராமம் தனது ''பெருமைக''ளில் ஒன்றை இழந்துள்ளது. நாடு தனக்கு வளஞ்சேர்க்கும் ஒரு பிரமுகரை இழந்துள்ளது. உலகம் ஒரு நல்ல மனிதனை இழந்துள்ளது.

அசோக்குமார்:

தேவசிகாமணி – சரோஜினிதேவி தம்பதியின் இரண்டாவது மகனை அசோக். கொழும்பு இந்துக்கல்லூரி க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவன். தகப்பனின் முயற்சிகளைத் தனது வாழ்க்கைப் பொறுப்பாக ஏற்றுக் கொள்வதிற் பெரும் சிரத்தை காட்டியவன். தமையன் 'முரளி'யின் வலது கரம். தம்பி தங்கைகளின் தோழன். உறவினர் சகலரினதும் வாத்சல்யத்துக்குரியவன். தனது நண்பர் குழாத்தின் இயக்குசக்தி.

பாடசாலையில் அவனுக்கிருந்த மதிப்பினை அவன் மரணக்கட்டிலருகே கண்டோமே.

இசையிலே ஈடுபாடுடையவன்.

அசோக்கா!

உன்குரலின் கீதத்தையும் உனது வாத்தியத்தின் இசையையும் கேட்கவென்று தான் காத்திருக்கின்றோம் ....

சுகுணா

தேவா – சரோஜாவின் ஐந்தாவது குழந்தை. தகப்பனின் அதிர்ஷ்டலக்ஷ்மி. அவள் கண்ணில் நீர் வழிந்தால் அவர் நெஞ்சில் உதிரம் கொட்டும். கொழும்பு சென்ற். பிரிட்ஜெட்ஸ் கொன்வென்டில் எட்டாந்தரம் படித்துக் கொண்டிருந்தவள்.

பெரிய பெண்ணாகி மூன்று மாதங்கள். பூப்புநீராட்டு விழாவைப் பிறந்த பதியிற் கொண்டாடித் திரும்பிய பொழுதே இந்தப் பேரிடி சூழ்ந்தது.

சுகுணாக்குட்டி!

உனது பூப்பு விழாவுக்குப் போட்ட பந்தலிலே தானம்மா உனக்கும் ஐயாவுக்கும் அசோக் கண்ணாவுக்கும் பிரியாவிடையும் தந்தோம்.

காற்று வீசவும் அஞ்சும் ஓர் இரவில்,
நட்சத்திரங்களுக்கிடையே இருக்கிற
அமைதியின் அர்த்தம் என்ன
என்று நான் திகைத்த ஓர் கணம்.

கதவருகே யாருடைய நிழல் அது?
நான் அறியேன்;
அவர்களும் அறியார்
உணர்வதன் முன்பு
அதுவும் நிகழ்ந்தது...

மரணம்.
காரணம் அற்றது, நியாயம் அற்றது;
கோட்பாடுகளும் விழுமியங்களும்
அவ்வவ் விடத்தே உறைந்து போக
முடிவிலா அமைதி.

மூடப்பட்ட கதவு முகப்பில்,
இருளில்
திசை தெரியாது
மோதி மோதிச் செட்டையடிக்கிற
புறாக்களை
தாங்கும் வலுவை என் இதயம் இழந்தது

இளைய வயதில் உலகை வெறுத்து
நிறங்களை உதிர்த்தன இரண்டு வண்ணத்துப் பூச்சிகள்
புழுதி படாது
பொன் இதழ் விரிந்த
சூரிய காந்தியாய்,
நீர் தொடச் சூரிய இதழ்கள் விரியும்
தாமரைக் கதிராய்
நட்சத்திரங்களாய்
மறுபடி அவைகள் பிறக்கும்.

அதுவரை
பொய்கைக் கரையில்
அலைகளைப் பார்த்திடு!

✩ சேரன்

மரணமும் வாழ்வும்

ஒளி நிறைந்த வானத்தில்
இருள்மின்னல் வெட்டியதே
இருள்மின்னல் வெட்டியதால்
ஒளி அவிந்து போயினதே

பூமலர்ந்த பந்தலிலே
புயல் ஒன்று வீசியதே
புயல் ஒன்று வீசியதால்
பூஉதிர்ந்து போயினதே.

வாழ்க்கை வசந்தமென
வாய்திறந்து பாடினமே
வாய்திறந்து பாடுகையில்
வாழ்க்கை முடிவுற்றதுவே.

வாழ்க்கை முடிவுற்றதனால்
மனம் உடைந்து நிற்கின்றோம்
மனம் உடைந்து நிற்பதனால்
மரணத்தைப் பாடுகிறோம்.

ஒளி அவிந்த வானத்தில்
மீண்டும் ஒளி தோன்றாதா?
பூஉதிர்ந்த பந்தலிலே
மீண்டும் ஒன்று பூக்காதா?

வாழ்க்கை நிலையாமை
வாய்மை என்று பாடுகிறோம்
வாழ்க்கை வெறும்கனவு
மாயை என்று பாடுகிறோம்

வாழ்வு முடியும் இடம்
மரணம் எனக் கூறேன் நான்
வாழ்வின் ஒருபகுதி
மரணம் எனத் தோன்றுவதால்

வாழ்க்கை முடிவதில்லை
வாழும் வரை வாழ்வோம் நம்
வாழ்க்கை முடிந்தாலும்
மற்றவருள் வாழ்வோமே

நுஃமான்

APPRECIATION

"This life, which seems so fair,
Is like a bubble blown up in the air"

T. Thevasigamany - Chairman of Jetro Textile Mills Ltd, Managing Partner of Tata Industries and S. S. K. Textiles Ex - Working Director of Victory Garments Ltd, and formerly of Forest Department passed away along with his second son Ashok Kumar and daughter Suguna in a fatal car accident around 11-30 p. m. on May 1, 1983 on the Chilaw-Colombo Road. He was returning to Colombo from his home town Valvettiturai after his daughter Suguna's coming of age function held on 25 th April, when the car driven by him crashed into a Mara tree by the road side resulting in the triple tragedy.

Mr. Thevasigamany, one time Carrom Champion of Sri Lanka, started his career as an officer in the Forest Department in 1952. He married the second daughter Sarojinidevi of the Late Mr. S. V. Nadarajah of Valvettiturai, in 1963. He retired from Government Service in 1968 and took to business with Mr. Mohamed Ibrahim as his partner. He had 4 sons and 2 daughters. With the Birth of 5 th Child Suguna, Fortune smiled on him. Thevasigamany who started business as a Trader in Pettah soon became an Industrialist owning an Export oriented Garment Factory and a Textile Processing and Printing Factory at Moratuwa, providing employment to over 300 young men and women in Ratmalana / Moratuwa area. His business connections extended to India, Singapore, Malaysia Middle East countries, Europe and U. S. A.

He attended the Berlin Fair with his wife in September 1982 and toured a number of European capitals including London and Paris

Late Mr. Thevasigamany was very popular among his many friends in the Public Service who affectionately called him "Prince Charming" owing to his handsome look and amiable manners. He was an outstanding figure in the Pettah business

community well liked by them. He gave freely to charity and gave handsome donations to Bambalapitiya Hindu College, St. Bridgets Convent, many temples and schools and to the needy in his own home town Valvettiturai. He planned to do a lot more.

His sudden death is a severe and cruel blow to his wife children, relatives and friends.

I had known the late Mr. T. Thevasigamany since 1952. We were close friends and had no secrets between us. My heart bleeds when I realise that my friend, his son Asok - kumar and his daughter Suguna are no more.

Good - bye my Friend and children, till we meet some day, some where.

May God Grant them Eternal Peace and strength and courage to his wife and remaining children.

"All who have meant good work with their whole hearts
have done good work, although they
may die before they have the time to sign it"

Anthony Saverimuthu
Retired Superintendent of Audit.

Master Ashok kumar - Thevasigamany's second son Ashok was born in 1965. He was studying in the Advance Level class at Colo--mbo Hindu College. He wanted to help his father by joining Jetro Textile Mills (Pte) Ltd., no sooner he completed the Exam. He was a popular figure at school and the large gathering comprising his school Principal, Teachers and schoolmates who filed past his body in solemn silence and tears was a heart rending sight.

Miss. Suguna - was born in January 1970. Suguna, the fifth child, brought luck to her family and was the pet of her father and mother. She was stadying in Grade VIII at St. Bridget Convent, Colombo. She excelled in studies and sports. It is sad to think that Fate had decreed that she should pass away no sooner she passed her childhood and attained maidenhood.

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய் காவாய்
உடையாய் கொடுவினையேன்
உழைத்தா லுறுதி யுண்டோதான் உமையாள்
கணவா எனையாள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ பிறைசேர்
சடையாய் முறையோவென்று
அழைத்தால் அருளா தொழிவதே அம்மா
னேயுன் அடியற்கே.

அடியேன் அல்லல் எல்லாமுன் அகல
ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறுஎங் கோவே
ஆஆ என்றருளிச்
செடிசேர் உடலைச் சிதையாத தெத்துக்கு
எங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளா தொறுத்தால்
ஒன்றும் போதுமே.

ஒன்றும் போதா நாயேனை உய்யக்
கொண்ட நின்கருணை
இன்றே யின்றிப் போய்த்தோதான் ஏழை
பங்கா எங்கோவே
குன்றே அனைய குற்றங்கள் குணமா
மென்றே நீகொண்டால்
என்றான் கெட்ட திரங்கிடாய் எண்டோள்
முக்கண் எம்மானே.

மானேர் நோக்கி மணவாளா மன்னே
நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகஎன் தனைநூக்கி உழலப்
பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை அறிந்து
நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளுநாள் என்றென்
றுன்னைக் கூறுவதே.

கூறும் நாவே முதலாகக் கூறுங்
கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்புநீ தீமை
நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை
உன்னை விரித்துரைக்கில்
வேறும் வகைஎன் சிவலோகா திகைத்தால்
தேற்ற வேண்டாவோ.

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்பாற் கரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே.

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

நாயிற் கடையாம் நாயேனை நயந்து
நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட்
டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான் என்ன
தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ்
வைப்பாய் கண்ணுதலே.

கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன்
கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலும்நான் அவையே
எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன்
கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை
சால அழகுடைத்தே.

அழகே புரிந்திட் டடிநாயேன் அரற்று
கின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி காட்டி
என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்குப் புராண
நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே கோனே
என்னைக் குழைத்தாயே.

மாணிக்கவாசகர்

ஆராவமுதே அடியே னுடலம் நின்பாலன்பாயே
நீரா யலைந்துகரைய உருக்குகின்ற நெடுமாலே!
சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக்கிடந்தாய்! கண்டேன்எம்மானே!

என்நான் செய்கேன்? யாரேகளைகண்? என்னை என்செய்கின்றாய்?
உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்
கன்னார் மதிள்சூழ் குடந்தைக்கிடந்தாய்! அடியே னருவாணாள்
சென்னாள் எந்நாள்? அந்நாள் உனதாள் பிடித்தே செலக்காணே.

செலக்காண் கிற்பார் காணுமளவும் செல்லும் கீர்த்தியாய்!
உலப்பிலானே! எல்லாவுலகு முடைய ஒருமூர்த்தி!
நலத்தால் மிக்கார் குடந்தைக்கிடந்தாய்! உன்னைக் காண்பான்நான்
அலப்பாம் ஆகாசத்தைநோக்கி அழுவன் தொழுவனே.

அழுவன் தொழுவன் ஆடிக்காண்பன் பாடிய லற்றுவன்
தழுவல் வினையாம் பக்கம்நோக்கி நாணிக் கவிழ்ந்திருப்பன்
செழுவொண் பழனக் குடந்தைக்கிடந்தாய்! செந்தாமரைக் கண்ணா!
தொழுவனேனை உனதாள் சேரும் வகையே சூழ்கண்டாய்.

களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்
வளைவாய் நேமிப்படையாய்! குடந்தக்கிடந்த மாமாயா!
தளரா வுடலம் எனதாவி சரிந்து போம்போது
இளையாது உனதாள் ஒருங்கப்பிடித்துப் போதஇசைநீயே.

வாரா வருவாய் வருமென்மாயா! மாயா மூர்த்தியாய்!
ஆரா வமுதாய் அடியே னாவி அகமேதித்திப்பாய்
தீரா வினைகள் தீரஎன்னையாண்டாய்! திருக்குடந்தை
ஊரா! உனக்காட்பட்டும் அடியேன் இன்னும் உழல்வேனோ?

நம்மாழ்வார்

எங்கள் இறைவனே; நாங்கள் எங்கள் கடமையைச் செய்ய மறந்துவிட்டாலும் அல்லது அதில் தவறிழைத்து விட்டாலும் அதுபற்றி நீ எங்களைக் குற்றம் பிடிக்காதே. எங்கள் இறைவனே; நீ எங்கள் மீது கடினமான கட்டளைகளை விதித்துப் பளுவான சுமையைச் சுமத்திவிடாதே எங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடினமான கட்டளைகளை நீ சுமத்தியவாறு சுமத்தாதே. எங்கள் இறைவனே, நாங்கள் தாங்கமுடியாத கஷ்டங்களை எங்கள் மீது சுமத்தி விடாதே. எங்கள் குற்றங்களை மன்னிப்பாயாக. எங்களைப் பொறுப்பாயாக. எங்கள் மீது கருணை புரிவாயாக. நீதான் எங்கள் இரட்சகன் ஆகவே உன்னை நிராகரிக்கும் ஜனங்கள் மீது வெற்றிபெற நீ எங்களுக்கு உதவிபுரிவாயாக என்று பிரார்த்திப்பீர்களாக!

திருக்குர்ஆன்: 2: 286

எனினும் அந்நாளில் நல்லடியார்களை நோக்கி திருப்தி அடைந்த ஆத்மாவே நீ உன் இறைவன் பால் செல்; அவனைக்கொண்டு நீ திருப்தியடை. உன்னைப்பற்றி அவன் திருப்தியடைந்திருக்கிறான். நீ என்னுடைய நல்லடியார்களில் சேர்ந்து என்னுடைய சுவனபதியிலும் நுழைந்துவிடு என்றும் கூறுவான்.

திருக்குர்ஆன்: 91: 27—30

சோதனைகளை மன உறுதியோடு தாங்குபவன் பேறு பெற்றவன். இதனால் அவனது தகைமை எண்பிக்கப்படும். இறைவன் தம்மீது அன்பு செலுத்துவோர்க்கு வாக்களித்த வாழ்வை அவன் வெற்றி வாகையாகப் பெறுவான்.

யாகப்பர் எழுதிய திருமுகம்.
புதிய ஏற்பாடு.

நன்றி

எமக்கு உற்ற இந்தப் பேரிடர் வேளையில், எம்மைத் தேற்றியும், எமக்குப் பல்வேறு வழிகளில் உதவியும் மனிதாயுதக் கடன் புரிந்த,

கொழும்பு புறக்கோட்டை வணிகப் பெருமக்களுக்கும், சிகிச்சை நிலையப் பொறுப்பாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும், வல்வை விளையாட்டு மன்றங்களுக்கும், கல்வி, பண்பாட்டு நிறுவனங்களுக்கும், நண்பர்களுக்கும், அன்பர்களுக்கும்,

எமது நன்றிக்கடனைத் தெரிவிப்பதில் திருப்தியடைகிறோம்.

சரோஜினிதேவி தேவசிகாமணி

தே. ராம்குமார்

தே. சுரேந்திரகுமார்

தே. அரவிந்த்குமார்

தே. ரேணுகா

31 - 5 - 1983.

காலா, உன்னை நான் சிறு புல்லென மதிக்கின்றேன் - என்றன்
காலருகே வாடா, சற்றே உன்னை மிதிக்கிறேன்!
வேலாயுத விருதினை மனதிற் பதிக்கிறேன் - நல்ல
வேதாந்த முரைத்த ஞானியர் தமையெண்ணித் துதிக்கிறேன்........

- பாரதியார் -

Death be not proud, though some have called thee
Mighty and dreadful, for thou art not so,
For, those, whom thou think'st thou dost overthrow
Die not.........

- **John Donne** -

Printed by: CHITRA ACHCHAKAM, JAFFNA.